# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8167222

1. District : மாவட்டம் சேலம் | PS: காவல்நிலையம் V&AC | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 9/AC/24 | Date: நாள் 7.10.24

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் | Sections பிரிவுகள்: 8
(ii) Act சட்டம்: 1988 as amended | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: in 2018. | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 6.10.24 at 09.25 hrs.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 7.10.24 | Time : நேரம் 11.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — கைப்பேசி வாயிலாக
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. R.D. நவீன்குமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் துரைப்பாண்டியன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16.12.76 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆய்வாளர் | (g) Address முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. P. சதாசிவம், மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகம் சேலம் மேற்கு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 7.10.24 [signature] 7/10/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

தெ.வே. திருஞானராஜன்,

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

7.10.24 at 16.30 hs.

Name: பெயர் ……………………………
Rank: நிலை …………………No. எண் ………

கா.து.க.
சேலம் V&AC.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 9/AC/2024 u/s 8 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் column 12-ன் தொடர்ச்சி.

07.10.2024-ம் தேதி பகல் சுமார் 11.00 மணியளவில் நான் சேலம் அஸ்தம்பட்டி - ஏற்காடு சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சேலம் சிறப்பு சுற்றுலா மாளிகை அறை எண்-6-ல் முகாமில் இருந்தபோது சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.R.D.ரவிகுமார் என்பவர் என் முன்னிலையில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புதல் R.D.ரவிகுமார், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். ஐயா, நான் தாற்போது சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஊழல் செய்யும் பொதுஊழியர்களுக்கு எதிராக பொறிவைத்து பிடிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுதல், அரசு அலுவலகங்களில் ஏதேனும் ஊழல் நடைபெறுவதாக தகவல் கிடைக்கப்பெற்றால் அந்த அலுவலகத்தில் திடீர் தணிக்கை செய்துதடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், ஊழல் செய்யும் பொது ஊழியர்கள் / தனி நபர்களுக்கு எதிராக தகவல்கள் சேகரித்து விழிப்பு அறிக்கை அனுப்பி அதன்பேரில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் ஊழல் தடுப்பு சம்மந்தமான வழக்குகளை புலன்விசாரணை செய்தல் ஆகியவை என்னுடைய முக்கியமான பணிகளாகும். கடந்த 23.09.2024 ஆம் தேதி ஆத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலும், அதன்பிறகு 25.09.2024 ஆம் தேதி மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அதிகாரிகளால் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த அலுவலகத்திலிருந்து கணக்கில் வராத தொகைகள் கைப்பற்றப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகளுக்கு பிறகு எனக்கு தெரிந்த சகாப்உதீன் என்பவர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சதாசிவம் அவர்கள் என்னுடன் தனிப்பட்ட முறையில் பேசவிரும்புவதாக என்னிடம் கூறியிருந்தார். கடந்த 05.10.2024 ஆம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் நான் சேலம் குரங்குசாவடி அருகே உள்ள கிரேண்ட் அஞ்சப்பர் என்ற

ஓட்டலில் நான் மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தசமயம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.சதாசிவம் அவர்கள் என்னை அடையாளம் கண்டு என்னிடம் வந்து தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அப்போது திரு.P.சதாசிவம் அவர்கள் தான் மருத்துவ விடுப்பில் இருப்பதாகவும், 07.10.2024 ஆம் தேதி மீண்டும் பணியில் சேர இருப்பதாகவும், தாங்கள் சொன்னால் பணிக்கு அறிக்கை செய்து கொள்கிறேன் என்றும் சொன்னார். அதற்கு நான், பணியில் சேர்வது உங்களுடைய விருப்பம், என்னிடம் எதற்காக கேட்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் தொடர்ந்து நீங்கள் ரைடு நடத்துவதால் எனக்கு பயமாக உள்ளது அதனால் தான் உங்களிடம் கேட்டுக் கொண்டு பணியில் சேரலாம் என்று தெரிவித்தார். அதற்கு நான் வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் கையூட்டு பணம் கைமாறுவதாக தகவல் கிடைத்தால் நாங்கள் நடவடிக்கை எடுப்போம், நீங்கள் தவறு செய்யாவிடில் ஏன் பயப்பட வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் எங்கள் அலுவலகத்தில் ரைடு நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் எனக்கு கொஞ்சம் முன்கூட்டியே தகவல் சொல்லுங்க சார், அதற்கு நான் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் அதெல்லாம் எதுவும் செய்ய தேவையில்லை என்று சொன்னேன். அதன்பிறகு அவர் இது தொடர்பாக நான் நாளை உங்களிடம் போனில் வாட்ஸ்அப் காலில் பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அவர் செயல்பாடுகளில் இருந்து எனக்கு அவர் தேவையற்ற ஆதாயம் ஏதேனும் தர முற்படுவதை நான் உணர்ந்து கொண்டேன். எனவே அவர் அடுத்த முறை என்னிடம் போனில் தொடர்பு கொள்ளும்போது அந்த உரையாடலின் பதிவை பதிவு செய்ய வேண்டும் என முடிவுசெய்தேன். அதன்படி மறுநாள் 06.10.2024 ஆம் தேதி காலை சுமார் 09.25 மணியளவில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.சதாசிவம் அவர்கள் அவருடைய மொபைல் எண் 7550324433-ல் இருந்து என்னுடைய மொபைல் எண் 8220006886-க்கு வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டு தன்னை அறிமுகம் செய்து கொண்டு பேசினார். அப்போது நான் என்னுடைய மொபைல் ஸ்பீக்கரை ஆன் செய்து கொண்டு மற்றொரு மொபைலில் வாய்ஸ் ரெக்காடரை ஆன் செய்து அந்த உரையாடலை பதிவு செய்தேன். அப்போது அவர் நாளைக்கு ஈவ்னிங் நான் பாயிடமோ அல்லது என் பையனிடமோ கொடுத்து அனுப்புகிறேன், நாளை காலையில் நான் ஜாயின் செய்கிறேன் என்று சொன்னார். அவர் எனக்கு கையூட்டாக பணம் தர முயல்வதை நான்

உணர்ந்து கொண்டு. இது யாருக்கும் தெரியக்கூடாது என்று சொன்னேன். இல்ல சார் பாய் நல்ல பையன் சிக்ரெட்டா வைச்சுக்க சொல்றேன் என்று சொன்னார். அதன்பிறகு அவரே அவருடைய பையனிடம் கொடுத்து அனுப்புவதாக சொன்னார். அவரையும் நான் வேண்டாம் என்று சொன்னேன். அதன்பிறகு அவர் சந்திக்க வேண்டிய இடத்தை என்னிடம் சொல்ல சொன்னார். நான் பிறகு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன். இப்படியே பேசிக்கொண்டிருந்தபோது நான் அவரிடம் உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர், எனக்கு எந்த பிரச்சனையும் வராமபாத்துக்கோங்க. ரைடு வரமாதிரி இருந்தால் முன்கூட்டியே சொல்லிடுங்க என்று என்னிடம் சொன்னார். அவர் எனக்கு கையூட்டாக பணம் தர முற்படுவதை நான் உணர்ந்து கொண்டாதால் நான் அவரிடம் என்ன செய்வீங்க என்று கேட்டேன். அதற்கு அவர் நாளை முதலில் ஒன்று தருகிறேன். பிறகு மாதா மாதம் 50 கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். நாளை 5 அல்லது 6 மணிக்கு மேல் அவுட்டரில் எங்காவது நேரில் சந்திக்கலாம் என்று சொல்லிவிட்டார். அவர் ஒன்று தருவதாக கூறியது ரூ.1,00,000/- ம் என்றும் 50 என்று கூறியது ரூ.50,000/- என்றும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆகவே இன்று மாலை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.சதாசிவம் அவர்களிடம் செல்போனில் பேசிவிட்டு, அவர் சொல்லும் இடத்திற்கு சென்று அவரை நேரில் சந்திக்க உள்ளேன். அவருக்கு சாதகமாக அலுவல் பணியை செய்ய ரூ.1,00,000/- கையூட்டாக பெற்றுக்கொள்ளுமாறு என்னை அவர் தூண்டுகிறார். அவரிடமிருந்து கையூட்டாக பணம் ரூ.1,00,000/ம் பெற்றுக்கொண்டு அவருக்கு சாதகமாக என்னுடைய அலுவல் பணியை செய்ய எனக்கு விருப்பமில்லை. ஆகவே எனக்கு கையூட்டாக பணம் ரூ.1,00,000/- கொடுக்க உறுதியளித்துள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.சதாசிவம் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு உண்மையுள்ள (ஒப்பம்) R.D.ரவிகுமார் 07.10.2024.

7/10/24

(G.V.கிருஷ்ணா ராஜன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.